**செய்தி வெளியீடு எண்: 305** **நாள்: 05.05.2018**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 4.5.2018 அன்று தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் 17 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் பகிர்மான குழாய்கள் அபிவிருத்தி பணிகள், 15 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் பிரதான குழாய்கள் அபிவிருத்தி பணிகள் மற்றும் 3 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் நகராட்சி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் துவக்கி வைத்தார்கள். மேலும், சென்னை, திருவள்ளூர், வேலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 16 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வகுப்பறைக் கட்டடங்கள், நகராட்சி அலுவலகக் கட்டடம், பூங்காங்கள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம், துப்புரவு பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்து, 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவிலான 4 இயந்திரப் பெருக்கி வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் 17 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் பகிர்மான குழாய்கள் அபிவிருத்தி பணிகள், 15 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் பிரதான குழாய்கள் அபிவிருத்தி பணிகள் மற்றும் 3 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் நகராட்சி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மேலும், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலகக் கட்டடம்; வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை நகராட்சியில் 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டடம்; தூத்துக்குடி மாநகராட்சியில் ஸ்டேட் பாங்க் காலனியில் 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பூங்கா மற்றும் போல்டன்புரம் கக்கன் காலனியில் 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பூங்கா;

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்படும், புதிய வண்ணாரப்பேட்டை – பட்டேல் நகர் மற்றும் திருவொற்றியூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை – புத்தா தெரு, வியாசர்பாடி – கல்யாணபுரம், சூளை – ராட்லர் தெரு, புரசைவாக்கம் – கங்காதீஸ்வரர் கோவில் தெரு, செனாய் நகர் – சுப்புராயன் தெரு மற்றும் புல்லா அவென்யூ, கொளத்தூர் – பாடசாலை தெரு, பெரம்பூர் – மார்க்கெட் தெரு மற்றும் மாதவரம் நெடுஞ்சாலை, அயனாவரம் – பாலவாயல் தெரு, நுங்கம்பாக்கம் – ராஜாஜி சாலை, ஆழ்வார்பேட்டை - பீமன்னா தோட்டம் சாலை, மேற்கு மாம்பலம் – கோதண்டராமர் கோவில் தெரு, மேற்கு சைதாப்பேட்டை – மேற்கு ஜோன்ஸ் சாலை, கிண்டி – மடுவின்கரை, கோடம்பாக்கம் – என்.எஸ்.கே. சாலை, எம்.ஜி.ஆர். நகர் – கோவிந்தசாமி தெரு, திருவான்மியூர் – பாரதிதாசன் சாலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள 20 சென்னை மாநகராட்சி மேல் நிலைப் பள்ளிகள்;

இராயபுரம் – புதுமனைகுப்பம், கொடுங்கையூர் – திருவொற்றியூர் நெடுஞ்சாலை சின்னான்டிமடம், அகரம் – எஸ்.ஆர்.பி. கோவில் தெரு (வடக்கு), பழைய வண்ணாரப்பேட்டை – ஜெயராமன் தெரு, மண்ணடி – அங்கப்பன் தெரு, அமைந்தகரை – பூந்தமல்லி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி – திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, வடபழனி – அம்மன் கோவில் தெரு ஆகிய இடங்களில் அமைந்துள்ள 8 சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள், என மொத்தம் 28 சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான சீர்மிகு மின்னனு வகுப்பறைகள் (Smart Class);

மண்ணடி, ஆதம் தெருவில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம்; மாதவரம் நெடுஞ்சாலை, பள்ளிக்கூட சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் தெலுங்கு தொடக்கப்பள்ளிகளில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கலையரங்கம்;

எண்ணூர் – தாழாங்குப்பம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்பு; கத்திவாக்கம் நெடுஞ்சாலை – எண்ணூர், சுனாமி குடியிருப்பு; தண்டையார்பேட்டை – சுனாமி குடியிருப்பு, ஏ.ஏ. திட்ட சாலையில் ‘B’ மற்றும் ‘M’ பிளாக்குகள்; நெற்குன்றம் – மேற்கு நடேசன் நகர், வீட்டு வசதி வாரிய குடியிருப்பு; கொடுங்கையூர் – யூனியன் கார்பைடு காலனி 9வது சாலை ஆகிய இடங்களில் 4 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6 பூங்காக்கள்;

பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக 7 வருட பராமரிப்புடன் 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 4 இயந்திரப் பெருக்கி வாகனங்கள்;

என மொத்தம் 57 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இணை ஆணையர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**